# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

***(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2023, ஒகத்து மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, யூலை மாதம் 19 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***194 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகம் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 205 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதாகும் -

(அ) வழக்கொன்றுக்கான முறையான திறத்தவர்கள் அதன் தீர்ப்புக்கான அல்லது இறுதித் தீர்வைக்கான சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதியின் வழங்குகைக்காக விண்ணப்பிக்குமிடத்து ஒவ்வொரு திறத்தவருக்கும் கட்டணமின்றி அத்தகைய வழக்கிற்கான அத்தீர்ப்பின் அல்லது இறுதித்தீர்வையின் சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதியின் வழங்குகை; அத்துடன்

(ஆ) இலத்திரனியல் முறையில் கையொப்பமிடப்பட்டவாறாகவும், இலச்சினையிடப்பட்டவாறாகவுமுள்ள ஆவணங்கள், நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட ஆவணமொன்றின் ஏற்றங்கீகாரம் மற்றும் பதிவாளரினதும், நீதிமன்றத்தினதும் ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினதும் இலத்திரனியல் கையொப்பத்தின் ஏற்றங்கீகாரம்.

**குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**
**(திருத்தம்)**

*ச.வ.- ஓ. 44/2017*

**(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*101 ஆம் அத்தியாயத்தின் 205 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**2**. (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை அதன் 205 ஆம் பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

*"ஏதேனும் வழக்கின் தீர்ப்பின், தீர்வையின் அல்லது வழக்கு நடவடிக்கைகளின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளுக்கு ஆட்கள் உரித்துடையவராதல்*

205. (1) நீதிமன்றப் பதிவாளர், வழக்கிற்கான முறையான திறத்தவர்கள் வழக்கின் தீர்ப்பு அல்லது இறுதித் தீர்வையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றுக்கு விண்ணப்பிக்கின்றவிடத்து, கட்டணமின்றி அத்தகைய திறத்தவர் ஒவ்வொருவருக்கும் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, நீதிமன்றப் பதிவாளர்-

(அ) எவரேனும் ஆள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புமூலம் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய கட்டணத்துடன்

சேர்த்து விண்ணப்பம் ஒன்றைச் செய்வதன்மீதும் அவசியமான முத்திரைகளை வழங்குவதன்மீதும், வழக்கொன்றில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் உள்ள தீர்ப்பின், தீர்வையின் அல்லது வழக்கு நடவடிக்கைகளின் பிரதிகளை அத்தகைய ஆளுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்; அல்லது

(ஆ) எவரேனும் ஆள் விண்ணப்பமொன்றைச் செய்வதன்மீதும் அவசியமான முத்திரைகளை முன்வைப்பதன்மீதும், அத்தகைய ஆளினால் தயாரிக்கப்பட்ட அத்தகைய எவையேனும் பிரதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்தலும் அதனை சான்றுப்படுத்துதலும் வேண்டும்:

ஆயின், திருமணஞ்சார் வழக்கொன்றிற்கான, மகவேற்பு விண்ணப்பமொன்றிற்கான அல்லது கட்டுக்காப்பு விண்ணப்பமொன்றிற்கான திறத்தவர் ஒருவர் அல்லாத ஆள் ஒருவர், அத்தகைய வழக்கின் அல்லது விண்ணப்பத்தின் தீர்ப்பு, கட்டளை அல்லது தீர்வை தவிர்ந்த, அதன் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளின் அல்லது ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராதல் ஆகாது:

ஆயின் மேலும், அத்தகைய திருமணஞ்சார் வழக்கிற்கு, மகவேற்பு விண்ணப்பத்திற்கு அல்லது கட்டுக்காப்பு விண்ணப்பத்திற்கு திறத்தவர் ஒருவர் அல்லாத விண்ணப்பதாரரின் தேவைப்பாடு பற்றித் திருப்திப்படுவதன்மேல், நீதிமன்றம் அத்தகைய வழக்கின் அல்லது விண்ணப்பத்தின் வழக்கு நடவடிக்கைகளின் அல்லது ஆவணங்களின்

சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை அத்தகைய விண்ணப்பதாரருக்கு வழங்குவதற்கு அத்தகைய நீதிமன்றத்தின் பதிவாளரைப் பணிக்கலாம்.

(3) (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 76 ஆம் பிரிவில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றமொன்றினால் இலத்திரனியல்ரீதியில் வழங்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட ஆவணமொன்று மெய்யென்று உறுதிப்படுத்தும் மற்றும் சரிபார்க்கும் நோக்கங்களுக்காக அத்தகைய ஆவணம் பின்வருமாறு இருக்குமிடத்து, நீதிமன்றத்தினால் கையொப்பமிடப்பட்டுள்ளதாக, இலச்சினையிடப் பட்டுள்ளதாக மற்றும் தேதியிடப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்:-

(அ) தொடக்கத்தில் இலத்திரனியல் வடிவத்தில் உருவாக்கப்பட்டிருப்பின், பதிவாளரின் அல்லது கையொப்பத்தை இடுவதற்கு சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலரின் பெயருடனும் அலுவலகமுறையான தலைப்புப் பெயருடனும் சேர்த்து அவரது இலத்திரனியல் கையொப்பத்தையும் இலத்திரனியல் இலச்சினையையும், நீதிமன்றத்தின் இலத்திரனியல் இலச்சினையையும், தேதியையும் கொண்டிருக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) தொடக்கத்தில் பத்திரவடிவத்தில் உருவாக்கப்பட்டு எடுத்துச் செல்லக் கூடிய ஆவண வடிவத்தில் (பிடிஎவ்) அல்லது அதையொத்த கோப்புமாற்று தொழில்நுட்பவியல்மூலம் இலத்திர

னியல் பிரதியொன்றாக மாற்றப்பட்டிருப்பின், பதிவாளரின் அல்லது கையொப்பத்தை இடுவதற்கு சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலரின் பெயருடனும் அலுவலக முறையான தலைப்புப் பெயருடனும் சேர்த்து அவரது கையொப்பத்தையும் இலச்சினையையும், நீதிமன்றத்தின் இலச்சினையையும் தேதியையும் கொண்டிருக்கின்றவிடத்து.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.